DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 31/2022** | |
| Prosecution Witness | | | : | **PW - 20** | |
| Name | : | **திரு.ரவி** | Caste | : | |
| Father's Name | : | **திரு.பாண்டுரங்கன்** | Calling | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Village | : | **திருநாகேஸ்வரம்** | Religion | : | |
| Taluk | : | | Age | : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 13th day of September 2023. 13-09-2023

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை**

**நான் தற்போது திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02/07/2021 அன்று திருநீலக்குடி காவல் நிலையத்தில் நான் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது, திருநீலக்குடி காவல் நிலைய குற்ற எண் 648/2021, வழக்கில் இறந்து போன ராஜேந்திரன் த/பெ சுப்பையன் தொடர்பான துரித முதல் தகவல் அறிக்கையை 13.45 மணிக்கு பெற்று, திருவிடைமருதூர் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் மாலை 4.30 மணிக்கு நீதிமன்றத்தில் ஒப்படைத்து, அதன்பின்னர் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் மற்றும் உயர் அதிகாரிகள் அலுவலகத்திலும் ஒப்படைத்து, நிலையம் வந்து ஆய்வாளரிடம் அறிக்கை செய்தேன். எனக்கு ஆய்வாளர் வழங்கிய பாஸ்**

போர்ட் **அ.சா.ஆ.18** ஆய்வாளர் என்னை 14/08/2021 அன்று விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**ஒப்பம் (xxxxxx)**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

**ஒப்பம் (xxxxxx)**
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

**/உண்மை நகல்/**

**ஒப்பம் (xxxxxx)**
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | | : | **S.C : 31/2022** |
| Prosecution Witness | | | | : | **PW - 19** |
| Name | : | **திரு.அப்துல் கவி** | Caste | : | |
| Father's Name | : | **திரு.அப்துல் பக்கி** | Calling | : | மருத்துவர் |
| Village | : | **கும்பகோணம்** | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 13th day of September 2023. 13-09-2023

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)

**முதல் விசாரணை**

நான் தற்போது உதவி மருத்துவராக அரசு தலைமை மருத்துவமனை கும்பகோணத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 02/07/2021 அன்று அதே மருத்துவமனையில் பணியில் இருந்த போது, மாலை 4 மணியளவில் திருவிடைமருதூர் வட்ட காவல் ஆய்வாளர் அவர்கள் திருநீலக்குடி காவல் நிலைய குற்ற எண் 648/2021, வழக்கில் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் பேரில் முதல் நிலை காவலர் 2411 திரு ஆர் சரவணகுமார் என்பவர் அடையாளம் காட்ட 57 வயது மதிக்கத்தக்க ராஜேந்திரன் என்ற ஆண் நபரின் உடலை நான் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் உள்ள சவகிடங்கில் மாலை 4 மணிக்கு நான் பிரேத பரிசோதனை செய்தேன். அவருடைய உடல் சாதாரண போசாக்குடன் காணப்பட்டது. கை கால்களில் விரைப்பு தன்மை இருந்தது. உடல் மல்லாந்த நிலையில் கிடத்தப்பட்டிருந்தது. அவருக்கு ஏற்பட்ட வெளிக்காயங்கள்.

1) வெட்டுக்காயம் அவருடைய இரண்டு கண்களும் மூக்கு பகுதியையும்

சேர்த்து 18x4x2cm அளவில் காணப்பட்டது.

2) வெட்டுக்காயம் மூக்கின் மேல் 6x2x4cm அளவில் காணப்பட்டது.

3) வெட்டுக்காயம் இடது முன்தலையின் மேல்பகுதியில் 9x2x1cm அளவில் காணப்பட்டது.

4) வெட்டுக்காயம் இடது தலை மேல் பகுதியில் 7x2x1cm அளவில் காணப்பட்டது.

5) மூன்று வெட்டுக்காயங்கள் அருகருகே கழுத்து பகுதியிலும் பின் தலையிலும் 12x2x1cm அளவிலும் 9x2x4cm அளவிலும், 10x2x1cm அளவிலும் காணப்பட்டது.

6) வெட்டுக்காயம் வலது பின்புறத்தலையில் 7x2x1cm அளவில் காணப்பட்டது.

உள் பரிசோதனையில், நெஞ்சுபுற பகுதியில் எலும்புகள், இருதயம், நுரையீரல் சாதாரணமாக காணப்பட்டது. வயிற்று பகுதியில் செறிக்காத உணவு இருந்தது. கல்லீரல், சிறுநீரகம் நீர்தாரை சாதாரணமாக இருந்தது. தலை பகுதியில் காயங்கள் உள்ளே மூளை பகுதியில் சிதைந்து இருந்தது. அதன் வெடடுக்காயம் மூளையின் அடிப்பகுயில் உள்ள எலும்பு வரை சேர்த்து வெட்டப்பட்டிருந்தது. பிரேத பரிசோதனை 5.30 மணிக்கு முடிக்கப்பட்டது. உடலின் உள்ளுறுப்புகள் சேகரிக்கப்பட்டு, ரசாயன பகுப்பாய்விற்காக அனுப்பப்பட்டது. ரசாயன பகுப்பாய்வு அறிக்கை பெறப்பட்ட பின்னர். இறந்த நபர் இறப்பிற்கான காரணம் கூர்மையான ஆயுதத்தால் பல முறை தாக்கப்பட்டதால் ஏற்பட்ட முகம், தலை மற்றும் மூளையில் ஏற்பட்ட காயங்கள் அதனால் ஏற்பட்ட ரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சியினால் இறப்பு ஏற்பட்டுள்ளது என்று நான் சான்று வழங்கினேன். இந்த பிரேத பரிசோதனை செய்வதற்கு 6 முதல் 12 மணி நேரத்திற்கு

முன்னர் இறப்பு ஏற்பட்டிருக்கக்கூடும் என்று நான் எனது பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவித்துள்ளேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ. 17 ஆகும்.** என்னிடம் நீதிமன்றத்தில் காணப்பிக்கப்படும் சா.பொ.4 அரிவாள் போன்ற கூர்மையான ஆயுதத்தால் தொடர்ச்சியாக வெட்டப்படும் போது மேற்சொன்ன காயங்களும், அந்த காயத்தினால் இறப்பும் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் ஆமாம். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

ஒப்பம் (xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/உண்மை நகல்/

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| Case No | | | : | **S.C : 31/2022** | |
|---|---|---|---|---|---|
| Prosecution Witness | | | : | **PW - 18** | |
| Name | : | **திரு.பிரபாகரன்** | Caste | : | |
| Father's Name | : | **திரு.அசோகன்** | Calling | : | VAO |
| Village | : | **சோழிங்கர்** | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 13th day of September 2023. 13-09-2023

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)

**முதல் விசாரணை**

நான் தற்போது ராணிபேட்டை மாவட்டம், சோழிங்கர் வட்டத்தில் சோழிங்கர் வட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் 2021 ஆம் வருடம் திருவிடைமருதூர் வட்டம், திருநீலக்குடி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். 09/07/2021 ஆம் தேதி இரவு 7.30 மணி போல திருவிடைமருதூர் ஆய்வாளர் என்னை போனில் திருநீலக்குடி காவல் நிலையத்திற்கு வரச்சொன்னார். நான் காவல் நிலையத்திற்கு 8 மணிக்கு போனேன். அங்கே ராஜேந்திரன் என்பரை கொலை செய்த சந்தோஷ் என்ற எதிரி காவல் நிலையத்தில் இருந்தார். அவர் இன்று நீதிமன்றத்தில் முதல் நபராக நிற்பவர் தான். காவல் ஆய்வாளர் சந்தோஷை விசாரித்து கொலை நடந்தது தொடர்பாக அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலம் எவ்வித அச்சுறுத்தலோ, துன்புறுத்தலோ இன்றி தானாக முன்வந்து சந்தோஷ் என்பவரால் கொடுக்கப்பட்டது. சந்தோஷ் என்பவர் சொல்ல சொல்ல முதலில் கையால்

எழுதப்பட்டு, பின்னர் அதை கணினியில் பதிவு செய்யப்பட்டது. அவ்வாறு கணினியில் பதிவு செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலில் எதிரி சந்தோஷ் கையெழுத்து போட்டார். சாட்சியாக நான் முதலில் போட்டேன். எனக்கு பின் திருநீலக்குடி கிராமத்தை சேர்ந்த மகாலிங்கம் என்பவர் சாட்சியாக கையெழுத்து போட்டார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கொலைக்கு பயன்படுத்தப்பட்ட அரிவாள் மற்றும் இருசக்கர வாகனம் எங்குள்ளது என்று அடையாளம் காண்ப்பிப்பதாக சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ. 14 ஆகும்.** பின்னர் எதிரியையும், சாட்சிகளான எங்களையும் ஆய்வாளர் அய்யாவாடி நாட்டாற்றங்கரைக்கு அழைத்து சென்றார். முதலில் எதிரி சந்தோஷ் கொலை செய்யப்பட்ட இடத்தை காண்பித்தார். பின்னர் அருவாளை எங்கே மறைத்து வைத்திருக்கிறேன் என்று அடையாளம் காண்பித்தார். அய்யாவாடி நாட்டாறு தென்கரையில் உள்ள செம்பிமலை சுடுகாடு அருகில் மரப்புதறுக்கு கீழ் அந்த அரிவாள் ரத்தக்கறையுடன் இருந்தது. அந்த அருவாளை கைப்பற்றிய போது அந்தயிடத்தில் இருந்த மண் கொஞ்சம் ஆய்வாளர் எடுத்தார். அந்தயிடத்தில் அருவாள் மற்றும் மண் எடுத்ததற்கு ஆய்வாளர் ஒரு மகஜர் தயார் செய்து. என்னிடமும், மகாலிங்கத்திடமும் கையெழுத்து வாங்கினார். அந்த கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். இரண்டாவதாக மகாலிங்கம் கையெழுத்து போட்டார். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ. 15 ஆகும்.** காண்பிக்கப்படும் அரிவாள் தான் எதிரி அடையாளம் காட்டிய இடத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட அரிவாளாகும். அந்த அரிவாள் **சா.பொ.4 ஆகும்.** அந்தயிடத்தில் சேகரிக்கப்பட்ட ரத்தம் தோயாக மண் **சா.பொ.5 ஆகும்.** எதிரி சந்தோஷ் தன் மாமா வீட்டில் தன்னுடைய

பைக்கை அடையாளம் காட்டுவதாக சொல்லி மலையப்பநல்லூர் அழைத்து சென்றார். அங்கே எதிரி சந்தோஷ் அடையாளம் காட்டிய வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த YAMAHA RAY Street Rally என்ற கருப்பு ஊதா நிறம் கொண்ட பைக் TN 68 AE 2570 ஆனந்தராஜ் வீட்டில் இருந்து எதிரி அடையாளம் காட்ட எடுக்கப்பட்டது. அந்த பைக் கைப்பற்றியதற்கும் ஆய்வாளர் ஒரு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து, அதில் என்னிடமும் மகாலிங்கத்திடமும் சாட்சியாக கையெழுத்து வாங்கினார். அந்த கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். இரண்டாவதாக மகாலிங்கம் கையெழுத்து போட்டார். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ. 16 ஆகும்.** எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவத்தின் போது தான் அணிந்திருந்த ஆடைகளை ஆற்றில் வீசிவிட்டு, பைக்கில் வைத்திருந்த ஆடைகளை மாற்றிக்கொண்டதாக தெரிவித்தார். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

ஒப்பம் (xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/உண்மை நகல்/
ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.